# சிவத்தமிழ்ச் செல்வி வாசகம்



வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை - இலங்கை

உ

# சிவத்தமிழ்ச்செல்வி வாசகம்

கலாநிதி, பண்டிதை அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது

## "Sivaththamilchelvi Vasakam"

(Dr. Thangammah Appakuddi Memorial Volume)

23. 06.2010

| | | |
|---|---|---|
| Title | : | "Sivaththamilchelvi Vasakam"<br>(Dr. Thangammah Appakuddi Memorial Volume) |
| Publishers | : | "Sri Durga Devi Devasthanam"<br>Tellipalai. |
| Date | : | 23 June 2010 |
| Pages | : | 344 |
| Copies | : | 1000 |
| Price | : | |
| Printers | : | Harikanan Printers,<br>424, K.K.S. Road, Jaffna.<br>Sri Lanka. |

# யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரக் கலையைப் பெண்களுக்கு அறிமுகப்படுத்தியவர் திருமதி கோபால் முத்துலட்சுமி

**சாந்தினி அருளானந்தம்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை என்பது உலகில் தோன்றிய ஒவ்வொரு சமுதாயத்திலும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. கலை இல்லாத எந்தவொரு சமுதாயத்தையும் காணமுடியாது. சு.வித்தியானந்தன் கலை பற்றி பின்வருமாறு குறிப்பிடப்படு கின்றார். 'இயற்கையோடு ஒட்டி வாழும் உள்ளத்தினையும் பண்பினையும் உடைய நாட்டு மக்கள் வளர்த்தவை (அழகுக்) கலைகள். இவை பல்லாயிரக் கணக்கான பொது மக்களின் விலை மதிக்க முடியாத சொத்துக்கள். அவர்களின் உணர்ச் சியையும் செயல்களையும் வெளியிடும் சாதனங்கள். எனவே கலை என்பது ஒரு மக்கள் வாழ்வியலின் பிரதான கூறுகளில் ஒன்றாக விளங்கு கின்றது எனலாம்.

தமிழர்களின் கலையை நோக்கின் பொதுவாக அவை கோயில்களை மைய மாகக் கொண்டு எழுச்சியும் வளர்ச்சியும் பெற்றதைச் சான்றுகளினூடாக அவ தானிக்கலாம். இத்தகைய பின்னணி யிலேயே இசைக்கலையும் குறிப்பாக நாதஸ்வரக் கலையும் தோன்றி வளர்ந்து. வந்துள்ளது நாதஸ்வரம் மங்கல வாத்தியம் என்ற நிலையில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம். துளைக் கருவியான நாதஸ்வரமும் தோற்கருவி யான தவிலும் ஒன்றை ஒன்று இணை பிரியாத இசைக் கருவிகளாக உள்ளமை இதன் சிறப்புக்கும், தனித்துவத்திற்கும், வரவேற்புக்கும் காரணமெனில் மிகையில்லை. இதனாலேயே இந்த மங்கல வாத்தியங்கள் கோயில்களில் மட்டுமல்லாது மகிழ்ச்சிக்குரிய வீட்டு வைபவங்களிலும் பொது வைபவங் களிலும் முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டன எனலாம்.

நாதஸ்வரம் என்பது 15ஆம் நூற்றாண்டில் அறிமுகமானதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. பாம்பை ஆட்டு விக்கும் கருவியான மகுடியில் இருந்து இக்கருவி தோற்றம் பெற்றிருக்கலாம் என்பது இக் கருவி பற்றிய ஆய்வாளர்களது கருத்தாகும். இதன் வடிவமும் நாக சர்ப்பத்திற்குரியதாகக் காணப் படுகின்றது. எனவே இதனுடைய ஆரம்ப காலப் பெயர் நாகசுரம் என்றும், இப் பெயரே நாதசுரம், நாதஸ்வரம் என மாற்றம் பெற்றதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. மேலும் திராவிட மக்களின் இசைக்கருவியாகவும் இதனை எடுத்துக் காட்டுவாருளர். எவ்வாறாயினும் இந்த மங்கல வாத்தியம் தமிழர் வாழ்வின் மங்கல நிகழ்வுகளில் முக்கியமானவோர் அங்கமாக விளங்கி வருகின்றதெனலாம்.

பண்டைக்காலம் முதல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமாக இருந்து வந்துள்ளதைச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாகத் தமிழக யாழ்ப்பாண கலை ரீதியிலான தொடர்புகள் இவ்விரு பிராந்தியங்களுக்கும் இடையிலான கலைப் பாலமாக அமைந்திருந்தன எனக் கூறலாம். இத்தகைய ஊடாட்டங்கள் இரு பிராந்திய கலை வளர்ச்சிக்கும் கலைப் பரிணாமத்திற்கும் வழி வகுத்தனவெனில் உயர் மரபுக் கலையான நாதஸ்வரக் கலையும் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றமையைக் காணலாம். பொதுவாக இலங்கையைப் பொறுத்தவரை நாதஸ்வரக்கலை சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்றதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இக்கலையைப் பயில்பவர்கள் இசை வேளாளர்கள், நட்டுவர், நயனகாரர் என அழைக்கப் படுவர். இக்குலத்தைச் சேர்ந்தவர்கள் இசையையே தம் வாழ்வாகக் கொண்டிருப்பர். அத்துடன் பெரும்பாலும் குருகுலக் கல்வியாகவே இக்கலை பயிலப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இக்கலையை ஆண்களே பயில்வது வழக்கமாக இருந்தாலும் சில பெண்களும் இத்துறையில் தடம் பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் இத்துறையில் ஒரு சில பெண்கள் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய பெண்களின் முன்னோடியாக திருமதி. முத்துலட்சுமியைக் கருதலாம். கோபால் முத்துலட்சுமி என்ற இப் பெண்மணி இன்று 70 வயதினைப் பூர்த்தி செய்தவராக அமைதியாக, அடக்கமாக பழைய வாழ்வின் சுவடுகளை மற்றவர்களோடு பகிர்ந்தவாறு தன் வாழ் நாளைக் கழித்தபடி வாழ்ந்து வருகின்றார்.

முத்துலட்சுமியின் தகப்பனாரின் பெயர் சங்கரப்பிள்ளை. இவர் இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலியில் பிறந்தவர். உழைப்பின் நிமித்தம் தன் மனைவியோடு யாழ்ப்பாணம் வந்தார். மலையாளத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளையின் மனைவி பாலம்மாவின் தகப்பனாரான மகாலிங்கம் சிறந்தவொரு தவில் வித்துவானாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. சங்கரப்பிள்ளை பாலம்மா தம்பதியினர் யாழ்ப்பாணத்தில் நெல்லியடியிலே தமது வாழ்விடத்தை அமைத்துக் கொண்டனர். தவில் வாசிப்பதைத் தமது பிரதான தொழிலாகக் கொண்டிருந்த சங்கரப் பிள்ளை தன்னுடைய பிள்ளைகள் சிறந்த கலைஞர்களாக விளங்க வேண்டும் என்ற ஆவலைக் கொண்டிருந்தார். முதலிரு பிள்ளைகளும் இறந்தமையினால் தனது கனவை நிஜமாக்க முடியவில்லை எனவே மூன்றாவதாகப் பிறந்த மகளைப் பெண்ணென்றும் எண்ணாது இக்கலைப் பயிற்சியில் ஈடுபடுத்தினார்.

சங்கரப்பிள்ளையின் ஆர்வத்தின் விளைவே நாதஸ்வரத்துறையில் முத்துலட்சுமியின் பிரவேசமாகும். முத்துலட்சுமி இக்கலையில் ஈடுபடுவதற்குத் தமது தந்தையையே காரணமாக இருந்ததாகவும், பின்னர் தாமும் இதனைப் பயில்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியதாகவும் குறிப்பிடுகின்றார். இளம்

வயதிலேயே தாளம் போடுவதற்குத் தந்தையிடம் கற்றார். முத்துலட்சுமிக்கு நெல்லியடியில் வசித்துவந்த மலையாளத்தைச் சேர்ந்த பெரிய சுவாமி என்பவர் முதற்குருவாகக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து உரும்பிராய் அங்கப்பா நாதஸ்வரகாரர் என்பவரிடமும் நாதஸ்வரத்தைக் கற்றுக் கொண்டார். குருகுலக் கல்வியாகவே இக்கலை பயிலப்படவேண்டியிருந்தது. இத்தகைய ஆரம்பத்தோடு நாதஸ்வரத் துறையில் முத்துலட்சுமி காலடி பதித்தமையானது யாழ்ப்பாண நாதஸ்வரக் கலை வாழ்வில் முதற் பெண்ணாகப் பிரகாசிக்க வழிவகுத்துக் கொடுத்ததெனலாம்.

13ஆவது வயதிலே ஆலய பூசைகளில் தந்தையுடன் இணைந்து வாசித்தார். 14ஆவது வயதில் கச்சேரிகளுக்குச் செல்லத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. இவருடைய தங்கை லட்சுமியும் நாதஸ்வரத்தை வாசிக்கக் கற்றுக் கொண்டதைத் தொடர்ந்து சகோதரிகள் இருவரும் இணைந்து கச்சேரிகள் செய்தனர். பெண்கள் கச்சேரிகளுக்கு மிகுந்த வரவேற்புக் கிடைக்கத் தொடங்கியதாக முத்துலட்சுமி தெரிவிக்கின்றார். பொதுவாக சில கலைகளைப் பெண்கள் வெளிப்படுத்தும் போது அவற்றுக்கு அதிக வரவேற்பு இருக்கும். யாழ்ப்பாணத்து நாதஸ்வரக் கலையைப் பொறுத்தவரை 'பொம்பிளை மேளம்' எனக்கூறி அதனைக் காண்பதற்குக் கூடுதலான ஆர்வங்காட்டுவதை இன்றுங் காண்கின்றோம். பெண்கள் ஒவ்வொரு துறைகளிலும் பிரகாசிக்கத் தொடங்கிய காலகட்டத்தில் இதுவரையும் யாழ்ப்பாணத்தில் பெண்கள் நுழையாத ஒரு துறையில் முத்துலட்சுமி ஈடுபட்டமையானது நாதஸ்வரத்தைப் பெண்களும் பயிலலாம் என்ற நிலையை ஏற்படுத்தியது எனலாம். நாதஸ்வரமானது மூச்சினை அடக்கி வாயினாலே ஊதி ஸ்வரதானங்களை விரல்களால் பொத்துவதன்மூலம் ஒலியானது வெளிவருகின்றது. இவ்வாறு சிரமமான நுட்பமான இசைக்கருவியான நாதஸ்வரத்தை பயிற்சி செய்து சபைகளில் வாசிப்பது இலகுவான விடயமல்ல. அவ்வாறான கருவியை முறையான பயிற்சியின் மூலம் கையாண்டு ஆண் இசைக் கலைஞர்களோடு இணையாகவும், இணைந்து வாசித்தமை போற்றுதற்குரியது.

இவர் நாதஸ்வரக் கலையில் சிறப்பாக விளக்கியதைத் தொடர்ந்து சில முக்கியமான நிறுவனங்கள் இவருக்குக் கௌரவ விருதுகள் அளித்துச் சிறப்பித்துள்ளன. நல்லூரில் உள்ள ஸ்ரீ பாலக்கதிர்காமம் ஆலயம் 1992ஆம் ஆண்டு அவ்வாலயத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்தகியாக இருபது வருடங்கள் இவர் கடமையாற்றியமைக்காக 'நாதஸ்வர கான வித்தகி' என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. நாதஸ்வரக்கலை வளர்ச்சிக்காக இவர் ஆற்றிய பணிகளைக் கௌரவித்து நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை 'கலைஞானச்சுடர்' என்ற விருதினை 2002ஆம் ஆண்டு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. எனினும் தமது திறமையை மதித்து உயர் விருதான கலாபூஷணம் விருது தனக்கு வழங்கப்

படவில்லை என்ற ஆதங்கம் அவருடைய உரையாடலில் வெளிப்படுகின்றது.

தனது தங்கையோடு பல நாதஸ்வர நிகழ்வுகளை நடாத்தினர். தங்கை கொழும்புக்குச் சென்றுவிட முத்துலட்சுமி தொடர்ந்தும் நாதஸ்வர இசையை வழங்கி வந்தார். தனது 18 ஆவது வயதிலே கோபால் என்பவரைத் திருமணம் செய்தார். நாதஸ்வரத்துறையில் எவ்விதம் ஈடுபாடும் இல்லாத கோபால் தனது மனைவியின் கலைத்துறைக்குப் பக்கபலமாக இருந்ததை அவதானிக் கலாம். குறிப்பாக முத்துலட்சுமியின் நாதஸ்வரக் குழுவுக்கு கார் சாரதியாகச் செயற்பட்டமையினால் எவ்வித பிரச் சினைகளும் தனக்கு ஏற்படவில்லையென முத்துலட்சுமி குறிப்பிடுகின்றார். பெண் என்பதால் தொழில் ரீதியாக இக்கலை பொறுத்துப் போட்டிகள் இருந்ததாகவும், ஆயினும் இத்துறையில் மகான்களாக விளங்கியவர்களுக்கு இத்தகைய போட்டி மனப்பான்மை இருக்கவில்லை. என்றும் இக்கலைஞர் குறிப்பிடுகின்றார்.

இவருடைய நாதஸ்வரக் குழுவில் நாதஸ்வரம் வாசிப்பவர்கள் இருவரும், தவில் இருவரும், சுருதிப்பெட்டி ஒருவரும், தாளம் ஒருவரும் என ஆறுபேர் இடம் பெற்றிருந்தனர். சேவகத்திற்குக் (கச்சேரி) கூப்பிடுபவர்கள். கேட்பதைப் பொறுத்து இன்னொரு குழுவையோ, இரண்டுக்கு மேற்பட்ட குழுவையோ அழைத்துச் செல்வது வழக்கம். வேறு நாதஸ்வரக் குழுவினர் முத்துலட்சுமியின் குழுவை அழைப்பதும் உண்டு. போகும் இடத்தைப் பொறுத்து சம்பளம் வேறுபடும். எனினும் வசதி குறைவான சாதாரண மக்களே நாதஸ்வர இசையை நன்கு இரசிக்கின்றார்கள் என்பது முத்துலட்சுமியின் அனுபவம் வாயிலாக முடிவு. அவர்களின் இசை இரசனையே அவருக்குப் பிடித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

கண்டி, மாத்தளை, திருகோண மலை, தம்பலகாமம், மன்னார், கொழும்பு போன்ற இடங்களிலும் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம், கீரிமலை, வல்லிபுரம், நல்லூர், வண்ணார்பண்ணை போன்ற இடங்களிலும் உள்ள பிரசித்தி பெற்ற கோயில்களிலெல்லாம் இவரது நாதஸ்வர இசை இடம் பெற்றது. மேலும் திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு வைபவங்கள் மற்றும் பொது நிகழ்வுகள் போன்றவற்றிலும் இவரது இசை நிகழ்வுகள் நடைபெற்றன. சில கோயில் களில் முத்துலட்சுமி புரோகிதம் (நித்தியம் வாசிப்பது) செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆரம்ப காலங்களில் நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் நித்திய மேளமாக இருந்துள்ளார். நல்லூர்க் கந்தன் ஆலயத் திலும் மேற்படி பணிக்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் தனிப்பட்ட சில காரணங்களால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இடைக் காலத்தில் கோயில்களை மையமாகக் கொண்டு அவற்றுக் கண்மையில் கோயிற் கலைஞர்கள் வாழ்ந் தமையைச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகக் கலைக் குடும்பங்கள் கோயிற் காணிகளில் குடியமர்த்தப்பட்டனர். சட்டநாதர்

கோயில் யாழ்ப்பாண இராசதானியின் நாற்றிசைக் கோயில்களில் ஒன்றாக 13ஆம் நூற்றாண்டில் சிங்கையாரிய மன்னனால் கட்டப்பட்டது. இத்தகைய பெருமை யுடைய கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலே முத்துலட்சுமியின் குடும்பம் வாழ்ந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. சட்டநாதர் கோயிலில் தாம் பணியாற்றிய மையால் அக்கோயில் காணியில் குடியிருக்கும் வாய்ப்பைப் பெற்றதாகவும் இன்றுவரை அக்காணியில் வாழ்ந்து வருவதாகவும் முத்துலட்சுமி கூறுகின்றார்.

தமிழகக் கலைஞர்கள் ஈழத்திற்கு வருவதும் இங்கு சிலமாத காலம் தங்கியிருந்து கச்சேரிகள் செய்வதும் 1948 வரை வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவர்களும் இங்குள்ள நாதஸ்வரக் கலைஞர்களும் இணைந்து நடத்தும் கச்சேரிகளுக்குத் தனி வரவேற்பிருந்தது. திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம், வேதாரணியம், வேதமூர்த்தி, இராஜ பாளையம் செல்லையா, கோட்டூர் இராஜரத்தினம்பிள்ளை, திருவாரூர் இராஜரத்தினம், திருநெல்வேலி சண்முகக் குட்டிக் கம்பர், நாமகிரிப் பேட்டைக் கிருஷ்ணன் போன்றவர்கள் யாழ்ப் பாணத்தில் கச்சேரி செய்து புகழ் பெற்ற வர்களாவர். இவர்களோடு யாழ்ப்பாணத் தவர்களும் சேர்ந்து கச்சேரிகள் நடத்தினர். இத்தகைய கச்சேரிகள் யாழ்ப்பாணத்த வரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. இக்காலத்தில் யாழ்ப்பாணம் அப்புலிங்கம், அளவெட்டி இரத்தின வேல், மல்லாகம் இராசு, கரம்பன் நடராசா, அளவெட்டி கோபால கிருஷ்ணன், அளவெட்டி பத்மநாதன், மல்லாகம் சுப்பிரமணியம், மாவிட்டபுரம் ஞானசுந்தரம், இணுவில் சுப்பிரமணியம், இணுவில் சுந்தரமூர்த்தி, மாவிட்டபுரம் இராசா போன்ற பலர் ஈழத்து நாதஸ்வரத் துறையில் சிறந்து விளங்கினார். இத்தகைய சூழலில் முத்துலட்சுமியின் கச்சேரி களுக்குத் தனித்துவமான வரவேற்புக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது மேற் குறிப்பிட்ட கலைஞர்களில் பலருடன் முத்துலட்சுமி இணைந்தும் கச்சேரிகள் செய்துள்ளார்.

இக்கலைஞர் கணவரை இழந்த பின்பு தனது கச்சேரிகளைக் குறைத்துக் கொண்டார். இதற்குச் சமூக காரணமும் பின்னணியாக இருந்தது. ஒவ்வொரு கச்சேரிக்கும் செல்லும்போதும் பட்டுச் சேலை, நெற்றித் திலகம், தலைமாலை அணிந்து சென்று நாதஸ்வரக் கலையின் மங்கலத்தை மேலும் மெருகூட்டுவது வழக்கம். கணவரை இழந்த பின்பு மங்கல மற்றும் கச்சேரிகளுக்குச் செல்வதை இவர் விரும்பவில்லை. ஆயினும் சில கோயில் களில் நித்திய பூசைக்குச் சென்றார். குறிப்பாக வல்லிபுரக் கோயிலில் இப்பணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முத்துலட்சுமிக்கு நான்கு பெண் பிள்ளைகளும் இரு ஆண் பிள்ளைகளும் உள்ளனர். இரு பெண் பிள்ளைகளில் ஒருவருக்குத் (தையல்நாயகி) தானே குருவாக இருந்து நாதஸ்வரத்தைக் கற்பித்த தோடு, இன்னொரு பெண் பிள்ளையைத் (தெய்வநாயகி) தனது சகோதரனைக் குருவாகக் கொண்டு தவிலைக் கற்பித்தார்.

முத்துலட்சுமி, தங்கை லட்சுமி, தையல் நாயகி , தெய்வநாயகி ஆகிய நால்வரும் ஒரே மேடையில் கச்சேரிகள் செய்தமை யும் குறிப்பிடத் தக்கது. முத்துலட்சுமி தாளம், சுருதி, தவில், நாதஸ்வரம் என எல்லாவற்றையும் கொண்ட ஒரு பெண்கள் குழுவை அமைக்க முனைந்தார். ஆனால் அவரது இவ்வெண்ணம் நிறைவேறவில்லை என்ற மனக்குறை இன்றும் அவரிடம் காணப் படுகின்றது. இருப்பினும் இவரிடம் ஏறக்குறை 30 பெண்கள் சீடர்களாக நாதஸ்வரக் கலையைப் பயின்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழகத்தில் சுபானி போன்ற பெண் நாதஸ்வரக் கலைஞர்களுக்குக் கிடைக்கின்ற வரவேற்பைப்போல் யாழ்ப்பாணத்தில் பெண் நாதஸ்வரக் கலைஞர்களுக்கு ஒப்பீட்டளவில் வரவேற்புக் குறைவென்பதை மறுக்க முடியாது. முத்துலட்சுமி போன்ற ஒரு சில பெண் கலைஞர்கள் இத்துறையில் ஈடுபட்டுச் சாதனை செய்தாலும் அவற்றை மேடையில் இரசிப்பதோடு இரசிகர்களின் பணி முற்றுப்பெற்று விடுவதைக் காணலாம். இத்தகைய கலைஞர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதரியதாகும். கலை கலாசாரத்திற்குப் பொறுப்பான நிறுவனங்களும் இத்தகைய பணிகளை முன்னெடுப்பதில் பெண் நாதஸ்வரக் கலைஞர்களைப் பொறுத்தவரை பின்னிற் பதையும் அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் யாழ்ப் பாணத்தில் பெண்கள் இத்தகைய துறையில் ஈடுபடத் தயங்கிய நிலையில், முதல் பெண் கலைஞராக முத்துலட்சுமி நாதஸ்வரத் துறையில் தடம் பதித்து மற்றைய பெண்களுக்கும் வழி காட்டியாக இருந்தமை அவரின் மகத் தான சாதனை எனலாம். எனவே அவரது சாதனை வரலாற்றில் நிலைத்து நிற்கும் பெருமைக் குரியதாகும்.

**உசாத்துணை**


1. சு.வித்தியானந்தன், சு., (1985), "காங்கேசன்துறைக் கல்வி வட்டாரக் கலைவளம்" காங்கேசன் கல்வி மலர்., காங்கேசன்துறைக் கல்வி வட்டார அதிபர்கள் சங்கம்.
2. மௌனகுரு, எஸ்., 1997, கலை இலக்கியக் கட்டுரைகள், சென்னை
3. சித்திராங்கி பாலகிருஷ்ணன்., (2000), "நாதசுரமா? நாகசுரமா?", பூச்சொரியும் பொன்னொச்சிமரம், அருணோதயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா.
4. கார்த்திகேசு குகபரன்., (2005), "ஈழத்தில் நாகஸ்வரம் தவிலின் தோற்றமும் வளர்ச்சியும்", சென்னைப் பல்கலைக்கழக இந்திய இசைத்துறை ஆய்வில் நிறைஞ்சர் (M.Phill) பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு.
5. யோகேஸ்வரி சொர்ணலிங்கம்., (2007), "இலங்கை இசைத்துறை வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு", இசைத்துறையின் நுண்கலைமாணிப் பட்டத்திற்கான இறுதியாண்டுத் தேர்வின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைக்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு.
6. நேர்காணல்:
   (அ) திருமதி கோபால் முத்துலட்சுமி., (நல்லூர்- வயது 70) 16.11.2008, 20.11.2008
   (ஆ) திரு. இ. சுந்தரமூர்த்தி, (இணுவில்- வயது 70) 18.12.2008.
   (இ) திரு.செ.சிவசுவாமி., (நல்லூர் - வயது 82) 20.12.2008